*செய்தி வெளியீடு எண் :36* *நாள் :18.10.2019*

**தேனி மாவட்டம்**
**விவசாயிகள் குறைதீர்க்கும் நாள் கூட்டம்**
**மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி ம.பல்லவி பல்தேவ், இ.ஆ.ப., அவர்கள்**
**தலைமையில் நடைபெற்றது.**

*****

தேனி மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில், விவசாயிகள் குறைதீர்க்கும் நாள் கூட்டம் மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி ம.பல்லவி பல்தேவ், இ.ஆ.ப., அவர்கள் இன்று (18.10.2019) தலைமையில் நடைபெற்றது.

வேளாண்மைத்துறையின் சார்பில் தென்னை மறு நடவு மற்றும் புனரமைத்தல் திட்டத்தின் கீழ் கம்பம் மற்றும் உத்தமபாளையம் வட்டத்திற்குட்பட்ட 7 விவசாயிகளுக்கு தென்னை மரங்களை மறு நடவு செய்வதற்கான ரூ.2,13,070/- மானிய தொகையினை மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் வழங்கினார்.

கால்நடை பராமரிப்புத் துறையின் மூலம் கோமாரி நோய் தடுப்பு முறைகள் மற்றும் கானை தடுப்பூசி முறைகள் குறித்து தொழில்நுட்ப உரை மற்றும் விளக்கக்க காட்சிகள் மூலம் விவசாயிகளுக்கு எடுத்துரைக்கப்பட்டது. மேலும் சீமா பருத்தி அபிவிருத்தி மற்றும் ஆராய்ச்சிக் கழகம் மூலம் அறுவடை செய்யும் போது பஞ்சு பிரித்தெடுக்கும் கருவி செயல் விளக்கம் காண்பிக்கப்பட்டது.

இக்கூட்டத்தில், மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் தெரிவித்ததாவது,

தேனி மாவட்டத்தில் 2019ம் வருட அக்டோபர் மாதம் வரையிலான சராசரியாக பெய்ய வேண்டிய மழையளவான 179.7 மி.மீ க்கு 85.91 மி.மீ மழை பெய்துள்ளது. இந்த வருட சராசரி 829.8 மி.மீ க்கு இதுவரை 739.77 பெய்துள்ளது இது ஆண்டு சராசரி மழையளவை காட்டிலும் 90.03 மி.மீ அதாவது 10.84 சதவீதம் குறைவாகும்.

தற்போது வடகிழக்கு பருவமழை தேனி மாவட்டத்தில் துவங்கி நல்ல மழைப்பொழிவை தந்து கொண்டிருக்கிறது. இந்த மழையைப் பயன்படுத்தி விவசாயிகள் மானாவாரியாக சிறுதானியங்கள், பயறு வகைகள் விதைப்பு மேற்கொள்வதால் பயிர் சாகுபடி பரப்பு அதிகமாக வாய்ப்புள்ளது. மேலும், பிடிஆர் வாய்க்கால், தந்தைப் பெரியார் வாய்க்காலில் தண்ணீர் திறந்து விடப்பட்டுள்ளதால் சுற்றியுள்ள கிணறுகளினல் நீர் மட்டம அதிகரிக்க வாய்ப்புள்ளது.

செப்டம்பர் மாதம் முடிய சாகுபடி செய்யப்பட்ட பரப்பு ஒத்திசைவு செய்ததின் அடிப்படையில் நெல் 3807 எக்டர், பயறுவகைகள் 3480 எக்டர், மற்றும் சிறுதானியங்கள் 4403 எக்டர், என ஒட்டுமொத்தமாக வேளாண்பயிர்கள் 16617 எக்டர் ஒத்திசைவு செய்யப்பட்டுள்ளது.

வேளாண்மை விரிவாக்க மையங்களில் விவசாயிகளுக்கு விநியோகம் செய்யும் பொருட்டு நெல் விதைகள் 89.8 மெ.டன்னும் (கோ51-50.16 மெ.டன், NLR-34449-23.09 மெ.டன், TKM-13 -16.55 மெ.டன்), சிறுதானியமான கம்பு விதை 1.63 மெ.டன்னும், உளுந்து, பாசிப்பயறு மற்றும் தட்டைப் பயிர் போன்ற பயறு வகை விதைகள் 25.72 மெ.டன்னும், எண்ணெய் வித்துப் பயிர்களில் நிலக்கடலை விதைகள்(VRI-8,Dharani,K-9,K-6,GJG-9)16.92 மெ.டன்னும் அனைத்து வேளாண்மை விரிவாக்க மையங்களிலும் இருப்பு வைக்கப்பட்டுள்ளது.

மேலும் சாகுபடிக்குத் தேவையான உரங்களான யூரியா 2094 மெ.டன்னும், DAP 1018 மெ.டன்னும், பொட்டாஷ் 1169 மெ.டன் மற்றும் கலப்பு உரங்கள் 5006 மெ.டன்னும் தனியார் நிறுவனங்கள் மற்றும் தொடக்க வேளாண்மை கூட்டுறவு சங்கங்களில் போதுமான அளவு இருப்பு வைக்கப்பட்டுள்ளது.

பிரதம மந்திரியின் விவசாயிகள் ஊக்கத் தொகை திட்டத்தின் கீழ் (PM KISAN) தேனி மாவட்டத்தில் 39,984 விவசாயிகள் பதிவு செய்துள்ளனர். பிரதம மந்திரியின் விவசாயிகள் ஓய்வூதிய திட்டத்தில் (PM-KMY) இதுவரை 18 முதல் 40 வயதுள்ள 931 விவசாயிகள் பதிவு செய்துள்ளனர்.

மேலும் PM-KISAN ஊக்கத்தொகை பெற்ற சிறு,குறு விவசாயிகள் அனைவரும் இத்திட்டத்தில் இணைந்து பயனடைய வேண்டும் என கேட்டுக்கொள்ளப்படுகிறது. பிரதம மந்திரி பயிர் காப்பீடுத் திட்டத்தில் காரீப் பருவத்தில் இதுவரை 474 விவசாயிகள் 485.4 ஏக்கர் பரப்பிற்கு பயிர் காப்பீடு செய்துள்ளார்கள். தேனி மாவட்டத்தில் இதுவரை 4134 விவசாயிகளுக்கு உழவர் கடன் அட்டை வழங்கப்பட்டுள்ளது.

பிரதம மந்திரி நுண்ணீர்ப்பாசன திட்டத்தின் கீழ் (PMKSY) தேனி மாவட்டத்தில் சொட்டு நீர் பாசனத்திற்கு 5371 எக்டர் பரப்பில் ரூ.29 கோடி மதிப்பீட்டில் செயல்படுத்தப்பட்டு வருகிறது. அனைத்து விவசாயிளும் தங்கள் வட்டாரத்திலுள்ள வேளாண்மை உதவி இயக்குநர் அலுவலகத்ததை அணுகி சிறு / குறு விவசாயிகள் 100 சத மானியத்திலும், சொட்டு நீர் பாசனம் அமைத்து பயன்பெறுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறது. நீடித்த நிலையான மானாவாரி வேளாண்மை இயக்கத் திட்டத்தின் கீழ் (MSDA) ஆண்டிபட்டி, பெரியகுளம் மற்றும் கடமலைக்குண்டு வட்டார விவசாயிகளின் நிலங்களில் பலன் தரும் தேக்கு, மகாகனி, மலை வேம்பு மற்றும் வேம்பு மரக்கன்றுகள் வழங்கப்பட உள்ளது.

தேனி மாவட்டத்தில் மக்காச்சோளப் பயிரில் படைப்புழுவினை கட்டுப்படுத்திட ஒட்டு மொத்த பயிர்பாதுகாப்பு மருந்து தெளிக்கும் திட்டம் 995 எக்டர் பரப்பளவு செயல்படுத்தப்படவுள்ளது. இத்திட்டத்தில் 20 நாட்களுக்கு உட்பட்ட பயிர்களுக்கு அசாடிராக்டின் 1500 பிபிஎம் (எக்டருக்கு 2.5 லிட்டர்) மருந்திற்கு ரூ1500-ம், 40 முதல் 45 நாட்களுக்கு உட்பட்ட பயிர்களுக்கு மெட்டாரைசியம் அனிசோபிலே ஒரு எக்டருக்கு 4 கிலோ (அல்லது) ஸ்பைனிட்டோரம் 11.7 % SC ஒரு எக்டருக்கு 250 மிலி (அல்லது) க்ளோரான்டிரனில்ப்ரோல் 18.5 % SC ஒரு எக்டருக்கு 200 மிலி, தயோமீத்தாக்சோம் 12.6 % + லேம்டாசைகலோத்திரின் 9.5 % ZC ஒரு எக்டருக்கு 250 மிலி ஆகியவற்றில் ஏதேனும் ஒன்றிற்கு ரூ.3000-ம் மற்றும் இரண்டு தெளிப்பிற்கு ரூ.1000-ம் ஆக மொத்தம் ஒரு எக்டருக்கு ரூ.5500-ம் முழு மானியமாக வழங்கப்பட உள்ளது. எனவே, விவசாயிகள் அரசின் திட்டங்களை பயன்படுத்திக் கொள்ள வேண்டும் என தெரிவித்தார்.

இக்கூட்டத்தில் மாவட்ட வன அலுலவர் எஸ.கௌதம், இ.வ.ப., மாவட்ட வருவாய் அலுவலர் ச.கந்தசாமி, வேளாண்மைத்துறை இணை இயக்குநர் ச.ஜவஹரிபாய், மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (விவசாயம்) கா.செந்தில்குமார், துணை இயக்குநர் (மாநிலத்திட்டம்) பா.இளங்கோவன், வேளாண்மை துணை இயக்குநர் (மத்திய திட்டம்) அ.அனுசுயா, அனைத்துறை அலுவலர்கள் மற்றும் ஏராளமான விவசாயிகள் கலந்துகொண்டனர்.

**வெளியீடு : செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், தேனி.**